# ஊழியக்காரர்கள்

2

சகோ. பிரன்ஹாம்
அவர்களின் மேற்கோள்கள்
(படங்களுடன்)

**சுவிசேஷத்தின் ஊழியக்காரர்களே, நாம் இந்த பெரிய கூட்டங்களையும் *(campaigns)* ஜனங்களுடைய கைதட்டல்களையும் கவனிக்க வேண்டாம்; உங்களுடைய கண்களை எஜமானர் மேலேயே வைத்திருங்கள்**



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: **நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும்,**

ஜூன் 19, 1958

கிரீன்வில், தென் கரோலினா, அமெரிக்கா

58-0619B

ஊழியக்கார நண்பர்களே, நான் உங்களுடைய நேரத்தில் மிக அதிகமானவற்றை எடுத்துக் கொள்கிறேன்,

ஆனால் இங்கிருந்து போவதற்கு முன்பாக நான் இதைக் கூற விரும்புகிறேன், உங்களோடு இதை விட விரும்புகிறேன்.

உங்கள் சகோதரனாக, உங்களை நேசிக்கிற ஒருவனாக, இப்பொழுது

இங்கிருந்து போவதற்கு முன்பாக, இந்தக் கருத்தை சற்று நினைவில் கொள்ளுங்கள்.

கொஞ்ச காலத்திற்கு முன்பு, அங்கே ஒரு மகத்தான மனிதன் இருந்தான், அவன் கைதேர்ந்த நிபுணனாக விளங்கிய ஒரு வாலிபனாக இருந்தான்.

ஓ, அவனால் எப்படியாக இசைக்கருவியை வாசிக்க முடிந்தது. அவன் அப்படியே தன்னுடைய இசையைக் கொண்டு, உலகத்தை நிரப்பிக் கொண்டிருந்தான். அவன் அதனுடைய ஒரு மகத்தான கலைஞனாக இருந்தான்.

எனவே ஒரு இரவில், ஒரு குறிப்பிட்ட தேசத்தில், இங்கிலாந்து தேசத்தில், அநேக ஆயிரக்கணக்கான ஜனங்களை பொழுது போக்குவித்துக் கொண்டிருந்தான்.

சுற்றிலும் எல்லாவிடங்களிலும், அவர்கள் இந்த மகத்தான கைதேர்ந்த நிபுணனைப் (பார்த்து) மிகவும் திகைத்துப் போனார்கள். அந்த ஜனங்கள்... அவன்

தன்னுடைய கச்சேரியை, அல்லது அவனுடைய இசையை இசைத்த பிறகு, அவர்கள் கூச்சலிட்டு, தங்கள் கரங்களைத் தட்டினார்கள், மிகவும் உணர்ச்சிவசப்பட்டு அவ்வாறு செய்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் அந்த வாலிபனோ அவர்களுடைய கைதட்டலின் பேரில் எந்த கவனமும் செலுத்தாமல், தொடர்ந்து மேலே நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பதை அவர்கள் கவனித்தனர்.

53. அவர்கள் - அவர்கள், அவனுடைய - அவனுடைய இசையை பாராட்டி, அவன் ஒரு மேதை என்று அவன் அறிந்து கொள்ளும்படி செய்ய அவர்களால் எவ்வளவு சத்தமிட முடியுமோ அவ்வளவு உரத்த சத்தமாக, கூச்சலிட்டுக் கொண்டும், ஓ, அப்படியே தொடர்ந்து செய்து கொண்டும் இருந்தார்கள்.

ஆனால் அவனோ தொடர்ந்து மேலே நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று அவர்களுக்கு வியப்பாயிருந்தது.

ஆனால் மேலே பால்கனியின் உச்சியில், வயதான குருவாகிய ஆசிரியர் அங்கே மேலே ஏறிப் போயிருந்தார்;

அந்தக் குருவாகிய ஆசிரியர் அதைக் குறித்து என்ன சொல்லப் போகிறாரோ என்றே அவன் வியந்தவனாக அவன் தன்னுடைய கண்ணை வைத்திருந்தான்.

அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று அவன் கவலைப்படவில்லை; அந்த ஆசிரியர் என்ன கூறுவார் என்றும், அந்த வயதான குருவாகிய ஆசிரியர் என்ன கூறுவார் என்பதைக் குறித்தே அவன் அக்கறை கொண்டான்.

சுவிசேஷத்தின் ஊழியக்காரர்களே, நாம் இந்த பெரிய கூட்டங்களையும் (campaigns) ஜனங்களுடைய கைதட்டல்களையும் கவனிக்க வேண்டாம்;

உங்களுடைய கண்களை எஜமானர் மேலேயே வைத்திருங்கள். அந்த நாளில் நம்மை உயிர்த்தெழச் செய்யக் கூடிய ஒரே ஒருவர் அவர் தான்.

★★★★★

# ஆனால் அன்பு திருத்தும் தன்மை வாய்ந்தது என்பது உங்களுக்குத் தெரியும்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்



## செய்தி: 65-04-29E மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல்

என்னிடம் ஒரு செய்தியுண்டு, அதற்கு நான் உத்திரவாதமுள்ளவனாயிருக்கிறேன். அநேக முறை, நான் ஒரு பயங்கரமான மனிதன்

என்றும், எனக்கு ஜனங்கள் என்றால் பிரியமில்லை என்றும், அவர்களை எப்பொழுதும் குற்றப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்றும் ஜனங்கள் என்னைக் கருதியுள்ளனர் (சற்று உட்கார்ந்து, ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்க்காத யாராகிலும் ஒருவர்) அது உண்மையல்ல நான் ஜனங்களை நேசிக்கிறேன்.

**ஆனால் அன்பு திருத்தும் தன்மை வாய்ந்தது என்பது உங்களுக்குத் தெரியும்.**

**9.** உங்கள் சிறிய மகன் தெருவில் உட்கார்ந்து

கொண்டிருந்தால், நீங்கள், “சிறுவனே, நீ அங்கு உட்காரக் கூடாது” என்று சொல்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். கார்கள் அவனை கடந்து வேகமாக சென்று கொண்டிருக்கின்றன. நீங்கள் அவனை உள்ளே கொண்டு வருகிறீர்கள். அவன் மறுபடியும் வெளியே ஓடிவிடுகின்றான். அவனை நீங்கள் திருத்த வேண்டும். அவன் மேல் உங்களுக்கு அன்பு இருந்தால். அவனைத் திருத்துவீர்கள். நீங்கள் அதை செய்ய வேண்டுமானால்...

ஒரு மனிதன் ஒரு சிறு படகில் ஆற்றில் மிதந்து நீர் வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருப்பதை கண்டு, அந்த படகு நீர் வீழ்ச்சியை அடைந்தால் அது மூழ்கிவிடும் என்று நீங்கள் அறிந்திருப்பீர்களானால், நீங்கள் அவனிடம், “ஜான், நீ சற்று சிந்திக்க வேண்டும் உன்னால் அதை கடக்க முடியாது” என்றா கூறுவீர்கள்? அவனால் கடக்க முடியாது என்று நான் அறிந்திருந்தால், என்னால் முடிந்தால் அவனைக் குலுக்கி படகிலிருந்து வெளியே தூக்கிவிடுவேன். **ஏனெனில்**

## அன்பு தான் அப்படி செய்யத் தூண்டுகிறது.

**10.** நான் பிரசங்கிக்கும் இந்த செய்திகளில், ஒரு உபதேசத்தையும் (Doctrine) நான் நுழைக்க முயல்வதில்லை. அதையே நான் என் சொந்த சபையில் செய்கிறேன். ஆனால் வெவ்வேறு ஸ்தாபனங்களை சேர்ந்தவர்களும் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்ட மனிதரும் ஸ்திரீகளும் கூடியிருக்கும் போது, நான் பொதுவாக பேசி அதை விளக்க முயல்கிறேன். ஆனால் நீங்கள் தேவனுடைய ஆவியால்

பிறந்திருந்தால், அதன் உள்ளான அர்த்தத்தையறிந்து கொள்ள அது போதுமானதாயிருக்கும். கிறிஸ்துவ மனிதர்களாகிய மெதோடிஸ்டுகள், பாப்டிஸ்டுகள், பிரஸ்பிடேரியன்கள் போன்றவர்களாகிய நீங்கள், நான் கூறுவதன் அர்த்தத்தை புரிந்து கொள்வீர்களென நம்புகிறேன்.



# ஒரு ஏழை மனிதனாய் இருப்பதையே நான் மிகவும் விரும்புகிறேன்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: சுயசரிதை, 53-1108A

நான் எங்கள் முதலாவது அனுபவத்தை இங்கே நினைவுகூருகிறேன், நாங்கள் மிக, மிக ஏழைகளாய் இருந்தோம். ஆகையால் தான் இன்று நான், என்னுடைய தெரிந்து கொள்ளுதல் என்னவெனில்... நான் – நான் இதை பயபக்தியோடு கூறுகிறேன். ஒரு ஏழை மனிதனாய் இருப்பதையே நான் மிகவும் விரும்புகிறேன். நான் ஒரு கோடீஸ்வரனாக இருக்க வேண்டுமென்று விரும்பியிருந்தால்,

அவ்வாறு இருந்திருக்க முடியும். FBI ஏஜண்டான ஒரு நபர் 10 இலட்சம் டாலர்கள், 5 இலட்சம் டாலர்கள் மதிப்புள்ள (5 இலட்சம் டாலர்கள் = சுமார் 31825000 ரூபாய், சுமார் 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் – மொழிபெயர்ப்பாளர்.) ஒரு காசோலையை, ஒரு வங்கி வரைவோலையை (bank draft) என்னிடம் கொண்டு வந்தார், நான் கலிபோர்னியாவிலுள்ள மிஷன் பெல் வைனரியில் (Mission Bell Winery) இருந்த போது, **நான் அந்தக் காசோலையை பார்க்கவும் மறுத்து விட்டேன்.** இரண்டு மார்பகங்களும்

எடுக்கப்பட்டு செயின்ட் லூயிஸில் இருந்த ஒரு பெண் சுகமாக்கப்பட்டாள், அவள்... புற்று நோய் அவள் உடல் முழுவதும் பரவியிருந்தது. டாக்டர். தியோடர் பால்வியாஸ் என்ற மருத்துவர் இந்த நோயாளியின் நிமித்தமாக மனமாற்றமடைந்து கலிபோர்னியாவிலுள்ள ஒக்லாண்டில் இந்தப் பிற்பகலில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார். கர்த்தர் எப்படியாக அந்த ஸ்திரீயிடம் உரைத்து, மூன்று நாட்களில் அவள் வீதியிலிருக்கும் கடைகளுக்குச் சென்று பொருட்களை வாங்கிக் கொண்டிருப்பாள் என்று அவளிடம்

கூறினார். அவள் சுயநினைவற்றவளாக இருப்பதாக அவளுடைய மகளிடம் கூறினார். மருத்துவர், “சங்கை பிரன்ஹாம் அவர்களே, அது பெரிய எண்ணம் தான், நீர் யாரோ ஒருவரிடம் இவ்விதமான தவறான ஒரு நம்பிக்கையை திடமாக உருவாக்குகிறீரே, அந்தப் பெண் அங்கே கிடந்து மரித்துக் கொண்டிருக்கிறாளே” என்று கூறினார்.

11. நான், “நான் இங்கே தங்குவதற்கான நல்ல வாய்ப்பு எனக்குள்ளது. அந்த ஸ்திரீ சுகமடைந்தவளாய் மூன்று நாட்களுக்குள் வீதியில் நடந்து

போகவில்லை என்றால், நான் என்னுடைய முதுகில் கள்ளத் தீர்க்கதரிசி என்ற அடையாளத்தை வைத்து விடுகிறேன், நீர் அப்படியே என்னைப் பட்டணத்தைச் சுற்றிலும் உம்முடைய காரின் முன்பாக என்னை ஓட வையும். அப்போது அவள் சுகமடையவில்லை என்றால், நான் அவ்வாறு செய்கிறேன். அவள் சுகமடைந்து மூன்று நாட்களுக்குள் வீதியில் நடந்து போவாளானால், நான் உம்முடைய முதுகில் ஒன்றை வைத்து (ஒட்டிக் கொண்டு) போகட்டும்” என்றேன்.

அந்த மருத்துவர் மனந்திரும்பி, இன்று சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கிறார். அவர்

மேற்கு கடற்கரையிலுள்ள சிறந்த அறுவை சிகிச்சை நிபுணர்களில் ஒருவர், ஜனங்கள் அவரைக் கொண்டு அறுவை சிகிச்சை செய்யும்படிக்கு நியூயார்க்கிலிருந்து கூட விமானத்தில் பறந்து வருகிறார்கள். அவர்கள் ஒரு – ஒரு பத்து இலட்சம், 5 இலட்சம் (டாலர்கள்) மதிப்புள்ள ஒரு வங்கி டிராப்ட்டை அனுப்பியிருந்தார்கள்; இரண்டு ஏஜெண்டுகள் அதைக் கொண்டு வந்தார்கள், நான் அந்நேரத்தில் இரண்டு அறைகளைக் கொண்ட ஒரு குடிசையில் தான் வாழ்ந்து வந்தேன். ஆனால் சந்தோஷத்தை உண்டாக்குவது பணமல்ல, அது...

சந்தோஷம் என்பது நீங்கள் எவ்வளவு உலகத்தின் பொருட்களை சொந்தமாக வைத்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து அமைவதில்லை, ஆனால் உங்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கும் ('lotted) பாகத்தில் நீங்கள் எவ்வளவு மனநிறைவோடிருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. திருப்தி அளிக்கிற ஒரு காரியத்தைக் கொண்டு அப்படியே உங்களை நீங்களே திருப்திபடுத்திக் கொள்ளுங்கள், அந்த திருப்தி அளிக்கிற காரியம் இயேசு கிறிஸ்து மட்டுமே.

★★★★★



# திரு. டெய்லர் அவனிடம், "மகனே, நீ தொடங்குவதற்கு முன்பு மெழுகுவர்த்தியை பாதி எரித்துவிடாதே" என்றார்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: உறுதிகொண்டபின் அக்கறை கொள்வீர்கள், Southern Pines, North Carolina, USA 62-06-10E

58. அண்மையில் நான் ஆப்பிரிக்காவுக்கு சென்றிருந்தேன். அவர்கள் அங்கிருந்த பழங்குடி மக்களுக்கு கல்வி கற்றுத்தர முயன்று கொண்டிருந்தனர். அவர்களை வெள்ளையர் மத்தியில் கொண்டுவரும்போது வெள்ளையருடைய பாவங்களையும் கற்றுக் கொள்கின்றனர். பழங்குடி மக்களுக்குத் தங்களுடைய பாவங்கள் வேறு உண்டு. அவனை வெள்ளையர் மத்தியில் கொண்டுவரும் போது, வெள்ளையரின் பாவங்களையும் கற்றுக் கொண்டு, அவன் துவக்கத்தில் இருந்ததைப் பார்க்கிலும் இரட்டிப்பாக நரகத்தின் பிள்ளையாகிவிடுகிறான். அவனுக்குத் தேவையானது

ஒன்றே; அவனுக்கு கிறிஸ்து மாத்திரமே தேவை. ஆமென்.

59. ஒருமுறை ஹட்சன் டெய்லர்... (சீனா வில் பெரிய மிஷனரியாக விளங்கிய அந்த ஹட்ஸன் டெய்லரைக் குறித்து எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?) ஒரு இளைஞன் இரட்சிக்கப்பட்டு தனக்கு ஊழியத்திற்கு அழைப்பு உள்ளதாக கூறினான். அவன் திரு. டெய்லரிடம் வந்து, "திரு டெய்லரே, நான் நான்கு ஆண்டுகள் மனோதத்துவம் பயில வேண்டுமா?" (அவன் வேறென்னவெல்லாம் செய்யவேண்டுமென்று) "என் முதல் பட்டத்தைப் பெற எத்தனை ஆண்டுகள் ஆகும்" என்று கேட்டான்.



திரு. டெய்லர் அவனிடம், "மகனே, நீ தொடங்குவதற்கு முன்பு மெழுகுவர்த்தியை பாதி எரித்துவிடாதே" என்றார். நானும் அப்படித் தான் நினைக்கிறேன். எரித்துவிடாதே – மெழுகுவர்த்தி பாதி எரியும்வரை காத்திருந் தால், ஒரு வகையான வேத பள்ளி படிப்பு உனக்குள் திணிக்கப்படுகிறது, ஒருவிதமான சவத்தைப் பாதுகாக்கும் தைலம். அப்படி செய்யாதே. மெழுகுவர்த்தியை ஏற்றினவுடனே, தொடங்கு. நான் அறியாமையை ஆதரிக்க முனையவில்லை, இதை நான் கூறமுற்படுகி றேன்: உனக்கு வேறொன்றும் தெரியாமலிருந் தால், மெழுகுவர்த்தி எப்படி ஏற்றப்பட்டதென்று அவர்களுக்கு சொல்; அவர்கள் எல்லோரும் அதை அறியவேண்டும். மெழுகுவர்த்தியை ஏற்றினது எது என்று அவர்களுக்கு சொல்; என்ன எரிந்து கொண்டிருக்கிறதென்று அவர்க ளுக்கு சொல். அது எப்படி ஏற்றப்பட்டதென்று அவர்களுக்குச் சொல். அவர்களும் ஏற்றப்பட்ட டும். அப்பொழுது அவர்கள் மற்றவைகளை கவனித்துக் கொள்வார்கள். நிச்சயமாக.

உனக்கு தெரியாததும், உனக்கு தெரிந்த பின்பும் ஒரு உபயோகமுமிராத பெரிய பெரிய சொற்களை அவர்களிடம் கூறவேண்டாம். "தேவனுக்கு மகிமை! பரிசுத்த ஆவி என்மேல் வந்தார். நான் இப்பொழுது வித்தியாசமான மனிதன்" என்று மாத்திரம் அவர்களுக்குச் சொல்லுங்கள். மெழுகுவர்த்தி எப்படி ஏற்றப் பட்டது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள். அது எரிந்து முடியும் வரைக்கும் காத்திருக்கவேண்டாம். அவர்கள் அநேகருக்கு இன்றைக்கு அது புகைந்து கொண்டிருக்கிறது. அது எப்படி ஏற்றப்பட்டது என்று மாத்திரம் அவர்களுக்குச் சொல்லுங்கள்.

★★★★★

ஆனால் தேவன் அவர்களுக்காக தம்முடைய இராஜாவைத் தேர்ந்தெடுத்த போது



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: **மகத்தான யுத்த வீரனாகிய தாவீது,** ஜனவரி 18, 1955, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா (55-0118)

7. ஆனால் இப்பொழுது, இஸ்ரவேலர்கள் மற்ற ஜனங்களைப் பாவனைச் செய்ய விரும்பினார்கள். அதைத்தான் சபையும் செய்ய விரும்புகிறது, பாவனை செய்ய விரும்பி, ஒரு பின்வாங்கிப்போன நிலையாக அது ஆகிவிட்டது. அப்போது இந்த நிலையில், அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் தங்களுக்கு ஒரு இராஜாவைப் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் இந்த இராஜாவைத் தெரிந்து கொண்டார்கள். அவர்கள் தங்களுடைய இராஜாவைக் கண்டுபிடிக்கும்படி போனார்கள், அவர்கள் அவ்வாறு கண்டுபிடித்த போது, அவர்கள் மிகப்பெரியதும், மிகவும் அழகானதுமான மனிதனைக் கண்டுபிடித்தார்கள், அவர்கள் மகத்தான பெரிய, ஏழு அடி உயரமுடைய கறுத்த மயிரடர்ந்த, கறுத்த பிரகாசமான கண்களை உடைய மனிதனை அவர்களால் கண்டுபிடிக்க முடிந்தது,

அது ஜனங்களுக்கு கவர்ச்சிகரமாக இருந்திருக்கும். அவர்கள், "அவர் ஒரு அற்புதமான இராஜாவாக இருப்பார்" என்று நினைத்தார்கள்.

ஆனால் தேவனோ சாமுவேலிடம், "மனிதன் வெளிப்புற தோற்றத்தைப் பார்க்கிறான், ஆனால் தேவனோ இருதயத்தைப் பார்க்கிறார்" என்று கூறியவண்ணமாக. இஸ்ரவேலர் தங்கள் இராஜாவைத் தெரிந்துகொண்ட போது, அவர்கள் மகத்தான பெரிய அழகானதும், பெரிய தோள்களை உடைய பலசாலியாக தோற்றமளிக்கிறதும், தன்னுடைய சேனை எல்லாவற்றிற்கும் மேலாக நேராக நிற்கிற தலையையும் புயங்களையும் உடையவனைத்தான் விரும்பினார்கள். ஆனால் தேவன் அவர்களுக்காக தம்முடைய இராஜாவைத் தேர்ந்தெடுத்த போது, ஒரு சிறிய சிவந்த, வாலிபப்பருவமாக தோற்றமளித்த, அந்தவிதமான ஒரு மனிதனை, ஒரு சிறிய பெண் தன்மை கொண்ட சிறுவனைப் போன்றவனைத் தான் அவர் தெரிந்து கொண்டார். அதுதான் அதைக் குறித்த தேவனுடைய தெரிந்தெடுத்தலாக இருந்தது. என்னவொரு வித்தியாசம். அதிலுள்ள வித்தியாசத்தைப் பார்த்தீர்களா? சிலசமயங்களில் தேவன் அந்தவிதமாகத்தான் காரியங்களைச் செய்கிறார். மிகவும் முரண்பாடாக இருக்கும் அப்படிப்பட்ட

விதத்தில் தான் அவர் அதைச் செய்கிறார், நாம் என்ன நினைக்கிறோமோ அதிலிருந்து மிகவும் வித்தியாசமாக அது இருக்கிறது.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.*

***குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. நன்றி.)***

# என் சந்ததியில் அவர் வராமல் போனால், இந்த இளைஞர்கள் இந்த செய்தியை கர்த்தருடைய வருகை மட்டும் கொண்டு செல்லலாம்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**



## என் சந்ததியில் அவர் வராமல் போனால், இந்த இளைஞர்கள் இந்த செய்தியை கர்த்தருடைய வருகை மட்டும் கொண்டு செல்லலாம்

இது இரட்சிப்பின் நாளென்றும் நாமறிவோம். இந்நாளில் தேவன் மனிதனை உலகத்திலிருந்து அழைத்து, பாவமான வாழ்க்கையிலிருந்து அவரை சேவிக்கும் வாழ்க்கைக்கு அழைக்கிறார். தேவன் உயரத்திலிருந்து தமது ஆவியை ஊற்றி, இந்நாளின் ஊழியத்தில் மகத்தான அற்புதங்களும் அடையாளங்களும் நடக்கும்படி செய்கிறார். இது முன்மாரியும் பின்மாரியும் ஒன்றாக விழும் நேரமாகும். மகத்தான அடையாளங்களும்

அற்புதங்களும் இந்நாளில் நிகழ வேண்டுமென்றும் அதை ஸ்தாபனங்கள் புறக்கணிக்குமென்றும் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் நான் உள்ளே செல்ல இந்த திறந்த வாசல்கள் இன்றும் உள்ளதற்காகவும், இங்குள்ள உங்கள் போதகரைப் போன்ற இளைஞருக்கு அது அளிக்கும் உற்சாகத்துக்காகவும் நான் தேவனுக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன்... எனக்கு வயதாகி கொண்டே போகின்றது. என் நாட்கள் எண்ணப்பட்டுள்ளன என்று அறிவேன். என் சந்ததியில் அவர் வராமல் போனால், இந்த இளைஞர்கள் இந்த செய்தியை கர்த்தருடைய வருகை மட்டும் கொண்டு செல்லலாம்... அவரை நான் காண்பேன் என்று நம்புகிறேன்... அவருக்காக நான் ஒவ்வொரு நாளும் விழிப்புடன் காத்திருந்து, அந்த நேரத்துக்காக என்னை ஆயத்தமாக வைத்துக்கொண்டிருக்கிறேன்.

*இனி வரப்போகும் காரியங்கள் 65-1205*



**நாம் ஒன்றைக் கூறுவதற்கு முன்பு, அதைக் குறித்து முழு நிச்சயமுடையவர்களாயிருக்க விரும்புகிறோம்**

ஒருக்கால் அடுத்த முறை அதைக் குறித்து பேசுவேன். எனக்கு படிக்கக் கிடைத்த நேரத்தை விட சற்று அதிக நேரம் அதற்காக செலவிட வேண்டும். ஏனெனில் சரித்திரத்திலிருந்து தேதிகள் போன்றவைகளைப் பெற வேண்டும். நீங்கள் எல்லோரும் புரிந்து கொள்வீர்கள். அது... எங்கேயும், ஏன், நாம் ஒன்றைக்

கூறுவதற்கு முன்பு, அதைக் குறித்து முழு நிச்சயமுடையவர்களாயிருக்க விரும்புகிறோம். அவை சரியாக இருக்க வேண்டும். ஏனெனில் நாம் உலகிலேயே மிகப் பெரிய உத்தியோகமாகிய போதகரின் பதவியை வகித்து இங்கு நின்று கொண்டிருக்கிறோம். அது மிகவும் உண்மையானதையும் பிழையற்றதையும் போதிக்கும் பதவியாகும். நாம் அப்படிதான் இருக்க வேண்டும். அதை செய்ய நாம் தேவன் மேல் சார்ந்திருக்கிறவர்களாக இருத்தல் அவசியம்.

*கண்டும் காணாதது போல்*
*விடப்படும் ஒரு உண்மையான*
*அடையாளம்* 61-1112

# 3

## வித்தியாசமான ஊழியங்களை நீங்கள் ஒன்றாகக் கலக்க முடியாது

இப்போது, இதில் அவர்... இரண்டு மூன்று வித்தியாசமான ஊழியங்களை நீங்கள் ஒன்றாகக் கலக்க முடியாது. மேய்ப்பனும் சுவிசேகஷனுமாக ஒரே சமயத்தில் இருப்பது போன்று. ஒரு தீர்க்கதரிசியாகவும் அதே வேளையில் மேய்ப்பனாகவும் நீங்கள் இருக்க முடியாது. (பாருங்கள்?) ஏனென்றால் உங்களிடம் இருப்பது வேறுபட்ட கிரியைகள், வேறுபட்ட ஊழியம்.

*ஏற்றகாலத்தில் ஆவிக்குரிய ஆகாரம்* 65-0718E




## தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், போதகர்கள், மேய்ப்பர்களின் வடிவத்தில் தேவன் தாமே அரணிப்பாகிப் பாதுகாக்கின்றார்

இப்பொழுது தேவன் தம்முடைய சேனையை அரணிட்டு பாதுகாப்பாக வைத்துள்ளார். எதைக்கொண்டு அரணிட்டுள்ளார்? தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், போதகர்கள், மேய்ப்பர்களின் வடிவத்தில் தாமே அரணிப்பாகிப் பாதுகாக்கின்றார். அவர் என்ன செய்தார்? தேவன் என்ன செய்து கொண்டிருந்தார்? கவனியுங்கள். சபையில் உள்ள அந்த அலுவல்கள் எதற்காக

அமைக்கப்பட்டுள்ளதென்று எப்பொழுதாவது நீங்கள் சிந்தித்துக் பார்த்ததுண்டா? அது தேவனுடைய யுத்த ஆடையாகும். உள்ளே இருக்கின்ற ஆடையாகும். அப்போஸ்தலன், தீர்க்கதரிசி, ஞானதிருஷ்டிக்காரன், சாத்தான், அதை அடையும் முன்னரே அதை முன்னதாகக் கண்டு அதை உரைத்ததாகும். அது என்ன? தேவன் தம்முடைய சபையில் யுத்த உடையுடுத்தி தயாராக இருத்தல் ஆகும். இந்த அலுவல்களெல்லாம் தேவனுடைய ஆடைகளாகும். மேய்ப்பர்கள், போதகர்கள், சுவிசேஷகர்கள் ஆகிய அலுவல்களை நீங்கள் காண்கையில், அது என்னவாயிருக்கிறது? அது தேவனுடைய யுத்த ஆடையாகும். தேவனுடைய பிரசன்னமாகும். அது மனிதனினூடாக கிரியை செய்யும் தேவனுடைய ஆவியாகும்.

*தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொள்ளுதல் 62-0607*



## சும்மா உட்கார்ந்து கொண்டிருக்காதீர்கள். நாம் ஏதாவதொன்றை செய்து கொண்டிருப்போம்

இங்குள்ள உங்களில் அநேகர், உங்கள் வாழ்வில் அழைப்பைப் பெற்ற தேவனுடைய மனிதர், நீங்கள் ஏதாவதொன்னைச் செய்து கொண்டிருக்கலாம். சும்மா உட்கார்ந்து கொண்டிருக்காதீர்கள். நாம் ஏதாவதொன்றை செய்து கொண்டிருப்போம். நீங்கள் ஒரு ஆத்துமாவையாவது

இரட்சிப்புக்குள் கொண்டு வராமலிருந்தால், அந்த ஒரு ஆத்துமாவை இரட்சிப்புக்குள் கொண்டு வாருங்கள். நாம் ஒவ்வொருவருமே.

*இயேசுவின் பட்சம்*
*சேர்ந்திருத்தல்* 62-0601

★★★★★

# எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பு கிறிஸ்துவின் மணவாட்டிக்கு ஊழியம் இருக்குமா?



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# செய்தி: முத்திரைகளின் பேரில் கேள்விகளும் பதில்களும் 63-0324M

நிச்சயமாக, இப்பொழுது நேரடியாக அதுதான் நடந்துக்கொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் மணவாட்டி, நிச்சயமாக! அதுதான் ஏற்ற வேளையின் செய்தி—கிறிஸ்துவின் மணவாட்டி.

நிச்சயமாக, அவள், அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், சுவிசேஷகர்கள், மற்றும் மேய்ப்பர்களை உடையவளாய் இருக்கிறாள். அது சரியா? (சபையார்,

“ஆமென்” என்று கூறுகின்றனர் – ஆசி)

அதுதான் கிறிஸ்துவின் மணவாட்டி. நிச்சயமாக, அவளுக்கு ஒரு ஊழியம் உண்டு. ஒரு மகத்தான் ஊழியம் – இந்த காலத்திற்குரிய ஊழியம், அது மிகவும் எளிமையானதாக இருக்கும்.

★★★★★

# மற்றெல்லா நிலங்களும் அமிழ்ந்து போகும் மணலே!

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

"என் நம்பிக்கை இயேசுவின் இரத்தத்திலும் நீதியிலுமேயன்றி வேறெதிலும் கட்டப்பட்டிருக்கவில்லை." அது ஒரு அற்புதமான பாடல் அல்லவா? "என் ஆத்துமா சுற்றிலும் சோர்ந்து போகும் போது, அவரே என் நம்பிக்கையும் உறைவிடமுமாயிருக்கிறார்." பாருங்கள்? "கிறிஸ்து என்னும் திடமான பாறையின் மேல் நிற்கிறேன்."

17. அந்தப் பண்டிதர்... அவருடைய பெயரை மறந்து விட்டேன்... சமீபத்தில் அவர் நியூயார்க் பட்டணத்திலுள்ள ஒரு பெரிய சடங்காசாரமான சபையிலே, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தார். செய்தித்தாளில் அது வெளியிடப்பட்டிருந்தது, நான் அதைக் கத்தரித்து வைத்திருக்கிறேன். அவருடைய சபையார் எல்லாரும் அவருக்கு விரோதமாயிருந்தனர். அவர் இயற்கைக்கு மேம்பட்டவைகளிலும், நித்திய ஜீவனிலும், ஆவியின் ஞானஸ்நானமானது

தனிப்பட்ட விசுவாசிக்கு ஜீவனைக் கொடுக்கிறது என்பதிலும், மற்றும் அடையாளங்களிலும் அற்புதங்களிலும் விசுவாசம் கொண்டிருந்தார்.

18. அவருடைய சபையார் அவரை வெளியேற்ற முடிவு செய்தனர். அவர்... அவர்களிடம் குத்தகைக்கு விடப்பட்ட கட்டிடம் இருந்தது. அவர் இந்த சபையிலேயே நீண்ட காலம் தங்கி விடலாமா என்று தேர்ந்தெடுக்கிற ஒரு உரிமை அவருக்கிருந்தது, ஓ, அவர்கள்-அவர்கள் சும்மா அங்கு உட்கார்ந்து கொண்டு, அந்த மனிதர் பிரசங்கிப்பதைக் குறித்து சலிப்படைந்திருந்தனர். ஆனால் அவரோ தான் சரியாய் இருக்கிறார் என்பதில் திட நம்பிக்கைக் கொண்டிருந்தார். அவர் ஒரு நோயாளியாகவும் கூட இருந்தார், அவர் சொன்னார்... இல்லை, அவர் ஒரு நோயாளி அல்ல. உங்கள் மன்னிப்பைக் கோருகிறேன். அவர் அப்படியே பிரசங்க பீடத்தில் இருந்தவாறே மரித்தார், ஆனால் அவர் ஒரு நோயாளி அல்ல. ஆகையால் அவர்... அவர்கள், அவர்கள் அவரை மரித்துப் போகும் அளவுக்கு துக்கப்படுத்தி விட்டிருந்தனர். ஆகையால் அவர்கள் அவர்மேல் கோபமாய் இருந்தனர், அவர் கூறுகிற எதையும் அவர்கள் கேட்கவில்லை.

அவரோ தொடர்ந்து சத்தியத்தையே பிரசங்கித்துக் கொண்டிருந்தார். மேலும் அவர்கள் கூறினார்கள்...

19. அவர்கள், அவர்கள் வெறும் ஒரு சமுதாய மார்க்கத்தைத் தான் கொண்டிருந்தனர், "ஓ, நாம் ஒன்றாகக் கூடி வந்திருக்கிறோம். இங்கேயுள்ள திருமதி. ஜோன்ஸ் அவர்கள் இதைச் சேர்ந்தவர்கள், ஆகையால் நாம் ஒன்றாகக் கூடி வருகிறோம். நமக்கு நம்முடைய சிறு தேனீர் விருந்துகளும் மற்றும் ஒவ்வொன்றுமே இருக்கின்றன" என்று கூறினார்கள். அது வெறுமனே ஒரு சமூக விவகாரமாக இருந்தது, ஆனால் அது மூடத்தனம் என்று அவர்கள் நம்பினர்.

20. "நாம் கூடி வந்து, மறுபடியும் பிறந்தாக வேண்டும்." அவர்கள் அவருடைய மார்க்கத்தைக் குறித்தும், யாவற்றைக் குறித்தும் அவரைப் பார்த்து பரிகாசம் செய்தனர், மற்றும் ஒவ்வொன்றையும் செய்தனர்.

21. ஒருநாள் காலையில், அவர் அங்கே பிரசங்க பீடத்தில் நின்று கொண்டு, இயேசு கிறிஸ்து உண்மையாகவே இருக்கிறார் என்று அழுதுகொண்டே பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் போது, அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அவர் கீழே விழ ஆரம்பித்தார், அவர்

அவ்விதமாக பின்னால் நின்றிருந்தார். அவர்களில் சிலர்... அவருடைய சபையோரில் இரண்டு மருத்துவர்கள் இருந்தார்கள், எனவே அவர்கள் வந்து அவரைத் தூக்கி நிறுத்தினர். அவர்கள் அந்தக் காரியத்தை அவருடைய இருதயத்தின் மேல் வைத்துப் பார்த்து, "அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது" என்றனர். "ஐயா, நீர்-நீர்-நீர் மரித்துக் கொண்டிருக்கிறீர்" என்றனர்.

அவர், "நான் மரித்துக் கொண்டிருக்கிறேனா?" என்றார்.

அவர்கள், "ஆம்" என்றனர்.

"எனக்கு விசுவாசமுள்ள டீக்கன்மார்களில் இரண்டு பேர் இங்கே வாருங்கள்" என்றார் அவர்.

22. அவர்கள் சூழ்ந்து வந்து அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டனர். மேலும் அவர்கள், "நீர் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் இந்தக் காரியத்தைக் குறித்து - இந்தப் புதிய மார்க்கத்தைக் குறித்து நீர் இப்பொழுது என்ன நினைக்கிறீர்" என்று கேட்டனர்.

23. அவர், "இப்பொழுது என்னை விடுங்கள்" என்றார். அவர்கள் அவரை விட்டனர். அவர் தம்முடைய கரங்களை மேலே உயர்த்தினவாறு, "கிறிஸ்து என்னும் திடமான பாறையின் மேல்

நிற்கிறேன்! மற்றெல்லா நிலங்களும் அமிழ்ந்து போகும் மணலே!” என்று கூறினார். அவர் அவ்வாறு கூறின போது, அவர் இவ்விதமாக பின்னோக்கி தள்ளாடி தடுமாறினார். அங்கே அவருக்குப் பின்னால் ஒரு சிலுவை தொங்கிக் கொண்டிருந்தது. அவர் இவ்விதமாக ஒரு கரத்தை சிலுவையின் ஒரு புறத்திலும், மறுகரத்தை மறுபுறத்திலும் போட்டுக் கொண்டு, “மற்றெல்லா நிலங்களும் அமிழ்ந்து போகும் மணலே! மற்றெல்லா நிலங்களும் அமிழ்ந்து போகும் மணலே!” என்று கூறினார்.

24. “ஓ தேவனே, அதுதான் வழி!” என்று நினைத்துக் கொண்டேன். அதுதான் அது. அதுதான் முக்கியமான விஷயம், அவர் அந்த சிலுவையின் மேலேயே மரித்துப் போனார், நீங்கள் பாருங்கள்... மற்றெல்லா நிலங்களும் அமிழ்ந்து போகும் மணலே. நமக்கிருக்கிற ஒரே நம்பிக்கை கிறிஸ்து தான். வேறெதிலும் நம்முடைய விசுவாசம் கட்டப்பட்டிருக்கவில்லை.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# சகோ.பிரான்ஹாமே விவாகரத்து செய்யப்பட்ட துணைவி உயிரோடிருக்கையில், செய்திக்கு வருவதற்கு முன்பு மறுவிவாகம் செய்து கொண்ட ஒரு நபர் ஊழியம் செய்வது முறையாகுமா?



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: கேள்விகளும் பதில்களும் 64-0823E

## சகோ.பிரான்ஹாமே (நாம் பார்ப்போம்) விவாகரத்து செய்யப்பட்ட துணைவி உயிரோடிருக்கையில், செய்திக்கு வருவதற்கு முன்பு மறுவிவாகம் செய்து கொண்ட ஒரு நபர் ஊழியம் செய்வது முறையாகுமா?

நல்லது. நீங்கள் குறித்துக் கொள்ள விரும்பினால், இந்த கேள்விக்கு விடையாக 1 தீமோத்தேயு 3:2 தீத்து 1:6—ஐ நீங்கள் படிக்க வேண்டுமென்று விரும்புகிறேன் (இவைகளை நான் எழுதி வைத்திருக்கிறேன்)

பாருங்கள்? ஒரு மனிதன் கண்காணிப்பாளன் அல்லது பிரசங்கியின்

உத்தியோகம் வகிக்க ஆவல் கொண்டால் (அல்லது சபையில் வேறெந்த உத்தியோகத்தையும்) அவன் ஒரே மனைவியை உடையவனாயிருக்க வேண்டும். அது உண்மை! ஒரு போதகர்.

இப்பொழுது, அது 1 தீமோத்தேயு 3:2ம் தீத்து 1:6ம். ஆம்! நல்லது, தேவனுடைய வீட்டில் ஊழியக்காரனாயிருக்கும் ஒருவன் ஒரே மனைவியை உடையவனாயிருக்க வேண்டும் என்பதைக் கவனியுங்கள்.

*கேள்விகளும் பதில்களும்* 64-0823E

★★★★★

**நீங்கள் வேதாகமத்தை வாசிக்கும்போது, அவர் அதை ஞானிகளின் கண்களுக்கும் கல்விமான்களின் கண்களுக்கும் மறைத்து, கற்றுக்கொள்ள விரும்புகிறவர்களாகிய அப்படிப்பட்ட பாலகருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்**



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# லூக்கா 10:21

**அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்; ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது.**

---

*செய்தி:* **ஆபிரகாம்,** பிப்ரவரி 11, 1961, லாங்பீச், கலிபோர்னியா, அமெரிக்கா

---

71. இப்பொழுது, நீங்கள், "இப்பொழுது, சகோதரன் பிரன்ஹாமே, சற்று பொறும், ஒரு நிமிடம் பொறும்" என்று கூறலாம். பாருங்கள்? **வேதாகமமானது விசுவாசிக்கு ஒரு காதல் கதையாக இருக்கிறது**. இப்பொழுது, நான் கடல் கடந்து வெளிநாடுகளுக்குப் போகும்போது, திருமதி பிரன்ஹாம், எனக்கு ஒரு கடிதம் எழுதி,

“அன்பான பில்லி, நான் இன்றிரவு இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்; நான் பிள்ளை களை படுக்கையில் கிடத்தவேண்டியிருக்கிறது. நான் இப்பொழுது தான் உங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன். தேவன் உங்களை ஆசீர் வதித்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் அறி வேன்” என்று கூறுவாள். பாருங்கள், அவள் கூறிக் கொண்டிருந்தது அதுதான், ஆனால் நானோ சரியாக அந்த வரிகளுக்கு இடையே வாசித்துக் கொண்டிருக்கிறேன். நான் அவளை நேசிக்கிறேன். புரிகிறதா? அவள் எதைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறாள் என்பது எனக்குத் தெரியும். அவள் அவை எல்லாவற்றையும் என்னிடம் கூற மாட்டாள், ஆனால், அவள் எழுதிக் கொண்டிருந்த விதத்தை வைத்து, எப்படியும் நிச்சயமாக நான் அதை அறிவேன்.

நல்லது, **அந்தவிதமாகத்தான் நீங்கள் வேதாகமத்தை வாசிக்கிறீர்கள்: வரிக ளுக்கு இடையில்.** தேவனிடம் இருக்கிறது - **அந்த காரணத்தினால் தான் அவர் அதை ஞானிகளின் கண்களுக்கும் கல்விமான்களின்** (prudent - புத்திசாலிகளின், செயல்நுட்ப மறிந்தவர்களின், விவேகமுடையவர்களின், உலகியல் அறிவுவாய்ந்தவர்களின், அறிவு

**நுட்பம் வாய்ந்தவர்களின், செயலறிவுத்திறம் வாய்ந்தவர்களின்) கண்களுக்கும் மறைத்து வைத்திருக்கிறார்,** அவர்கள், "எனக்கு ஒரு பி.எச்.டி. பட்டம், ஒரு டி.டி.டி. பட்டமும் (D.D.D.) இருக்கிறது" என்று கூறுகிறார்கள்.

D.D. என்பது எதைக் குறித்துக்காட்டுகிறது தெரியுமா? உயிரற்ற செய்த நாய் (Dead dog) என்பது தான். எனவே சகோதரனே, நான் உங்களுக்குக் கூறுகிறேன், என்ன - நமக்கு இன்று அது அவசியமில்லை. **நமக்கு ஏதோவொரு வேதசாஸ்திரம் அவசியமில்லை, ஆனால் முழங்கால்சாஸ்திரம்** (kneeology) **தான் நமக்குத் தேவையாக இருக்கிறது.** ஆமாம். நல்லது, **வேதாகமம் அதை ஊமையான நாய்** (dumb dog) **என்று அழைக்கிறது**, எனவே அது அப்படியே அவ்வளவு மோசமாக இருந்திருக்கும். உங்களுக்குப் புரிகிறதா? **அவர்கள் ஊமையான நாய்கள்** (dumb dogs), D.D.'s **என்று அது கூறுகிறது.**

இப்பொழுது, கவனியுங்கள், அவர் அங்கே உள்ளே இருந்து, "எனக்கு இது கிடைத்தது, எனக்கு அது கிடைத்தது" என்று (கூறுகிறார்.)

நல்லது, அதெல்லாம் சரிதான். **நான் இயேசுவைக் கொண்டிருக்கவே விரும்புகிறேன். பேதுருவும் யோவானும் பேதைமையுள்ளவர்களென்றும் படிப்பறியாதவர்கள் என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள், ஆனால் அவர்கள் இயேசுவோடு கூட இருந்திருந்தார்கள் என்பதில் அவர்கள் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. அவர்களில் ஒருவருக்கும் தங்கள் பெயரையோ அல்லது எதையுமோ கையெழுத்துப் போட முடியாதிருந்தது, ஆனால் அவர்கள் இயேசுவோடு இருந்திருந்தார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்;** அதைத் தான் நாம் செய்ய வேண்டும்: அவர்கள் இயேசுவோடு இருந்திருந்தார்கள் என்பதை அறிவது.

72. இப்பொழுது, **நீங்கள் வேதாகமத்தை வாசிக்கும்போது, அவர் அதை ஞானிகளின் கண்களுக்கும் கல்விமான்களின் கண்களுக்கும் மறைத்து, கற்றுக்கொள்ள விரும்புகிறவர்களாகிய அப்படிப்பட்ட பாலகருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.**

~ 6 ~

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதித் திருத்தம் செய்து வெளிவரும்.*

***குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன. நன்றி.)***

# ஐந்து வகை ஊழியங்கள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# ஐந்து வகை ஊழியங்கள்

எபேசியர் **4:11–13**

11. மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும்,

12. பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,

13. அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.

அப்போஸ்தலர்

## அப்போஸ்தலர்களின் விசுவாசப்பிரமாணம்

“ஓ, அற்புதங்கள், அடையாளங்களின் நாட்கள் கடந்து போயிற்று. அத்தகைய காரியங்கள் இன்றைக்கு தேவையென்று தேவன் கருதுவதில்லை. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நான் விசுவாசிக்கிறேன். ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்ட தேவனுடைய தாயாகிய மரியாளே வாழ்க” என்றெல்லாம் கூறுகிறார்கள். மேலும் சிலர், “அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தை நான் விசுவாசிக்கிறேன். தேவனாகிய பிதா வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தவர் என்று விசுவாசிக்கிறேன். பரிசுத்த ரோமன் கத்தோலிக்க சபையை நான்

விசுவாசிக்கிறேன்” என்றெல்லாம் கூறுகின்றனர்.

ஒரு அப்போஸ்தலன் எப்பொழுது அத்தகைய விசுவாசப் பிரமாணத்தை உடையவனாயிருந்தான் என்று எனக்குக் கூறுங்கள். அப்போஸ்தலருக்கென்று ஒரு விசுவாசப்பிரமாணம் உண்டாயிருக்குமானால் அது அப்போஸ்தலர் நடபடிகள் 2–ம் அதிகாரம் 38–ம் வசனம் தான். “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.” இதுதான் அப்போஸ்தலர்களின் விசுவாசப்பிரமாணம். அது வார்த்தையாயும் சத்தியமாயுமிருக்கிறது. இன்றைக்கு அது மாறாததாக இருக்கின்றது. பாவம் என்ற நோய்க்கு மருத்துவக் குறிப்பு சீட்டு அதுதான்.

*மூவகை விசுவாசிகள்*

63-1124E

## தீர்க்கதரிசி

தீர்க்கதரிசி என்ற பதத்திற்கு ஆங்கில மொழிப்பெயர்ப்பில் "போதகர்" என்று பொருள்படும். பழைய ஏற்பாட்டின் "ஞானதிருஷ்டிக்காரன் (Seer)" என்ற பதத்திற்கு, தேவனுடைய வார்த்தையை தன்னிடத்தில் வரப் பெற்றவனாயிருந்து அதற்குரிய திவ்விய வெளிப்பாட்டையும், எதிர்நோக்கியுள்ள காரியங்களையும் முன் கூட்டியே அறிபவன் என்று பொருள்படும் என்று கூறினேன்.

*மூவகை விசுவாசிகள்*

63-1124E

# தீர்க்கதரிசிக்கு தேவனுடைய வார்த்தை உண்டாகிறது

தீர்க்கதரிசி ஒரு விசேஷித்த மனிதன். தீர்க்கதரிசிக்கு தேவனுடைய வார்த்தை உண்டாகிறது. தீர்க்கதரிசியின் வாழ்க்கை எவ்வாறு உருவமைக்கப்பட்டிருக்கிறதென்றால் அவனுடைய உள்ளுணர்வும் (Sub conscious) முதலுணர்வும் (First conscious) ஒன்றுக்கொன்று மிக அருகாமையில் இருப்பதால், அவன் சொப்பனம் காண உறங்கச் செல்வதில்லை. அவன் விழித்திருக்கும் போதே அதை காண்கிறான். பாருங்கள்? அது தேவன் தான் செய்ய வேண்டிய காரியமாகும். பாருங்கள். என்ன நடக்கிறதென்று தீர்க்கதரிசி காண்கிறான்.

ஒரு தீர்க்கதரிசி இனிமேல் நிகழப்போகிறவைகளை முன்கூட்டியே காண்கிறான். அவன் தேவனுடைய கோபகலசத்தை, அது நிறைவதற்கு முன்பே காண்கிறான். பாருங்கள்? அவன்

“கர்த்தர் உரைக்கறதாவது! நீங்கள் மனத்திரும்பாவிட்டால், தேவன் இந்த நகரத்தை அழித்துப் போடுவார்” என்று கூற முடியும். ஏன்? அவன் ஒரு கழுகு. அவன் வெகுதூரம் உயர பறக்கிறான். பாருங்கள்? அந்த உயரத்திலிருந்து அவன் பார்க்கும் போது, தேவனுடைய கோபகலசம் ஊற்றப்படுவதை காண்கிறான். அதை தான் தீர்க்கதரிசி நோக்குகிறான். அவன் இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைக் காண்பதில்லை. அவன் தூரத்தில் என்ன நடக்கிறது என்று பார்க்கிறான். அதைப் பார்த்து விட்டு அவன், “அது வருகிறது” என்கிறான். அவன் மிக உயரச் சென்று அங்கிருந்து அவனால் அந்த நிழலைக் காண முடிகிறது. அவன், “இருள் பூமியை மூடும்” என்கிறான். அவன் போதிய அளவு உயரத்தில் இருப்பதனால், இப்பொழுது சூரியன் பிரகாசித்த போதிலும், வரப்போகும் அந்த இருளை அவனால் காணமுடிகிறது. அவன் காண்கிறதை அவன் உரைக்கிறான். அது இப்பொழுது

இங்கில்லை, ஆனால் அது நிச்சயம் இங்கிருக்கும்! அது உண்மை. அது இங்கிருக்கும் – காரிருள் ஜனங்களை மூடுதல். அநேக ஆண்டுகளுக்குப் பிறகு அது வரப்போகிறது என்பதை அவன் அறிகிறான். ஆயினும் அவன் அதை இப்பொழுதே காண்கிறான்.

*எச்சரிக்கை அதன்பிறகு*

*நியாயத்தீர்ப்பு 63-0724*

## ஒரு தீர்க்கதரிசியின் வருகை நியாயத்தீர்ப்பு சமீபமாயிருக்கிறது என்ற எச்சரிப்பின் அடையாளமாய் இருக்கிறது

கவனியுங்கள். ஒரு தீர்க்கதரிசியின் வருகை நியாயத்தீர்ப்பு சமீபமாயிருக்கிறது என்ற எச்சரிப்பின் அடையாளமாய் இருக்கிறது. உங்களுக்கு அது தெரியுமா? தேசத்தில் ஒரு தீர்க்கதரிசி இருப்பாரேயானால், அப்பொழுது

நியாயத்தீர்ப்பு தாக்க ஆயத்தமாயிருக்கிறது.

நினைவிருக்கட்டும். அவர் முதலாவது நிச்சயமாகவே தேவனாலும் அந்த நாளுக்கான வார்த்தையாலும் ரூபகாரப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னரே அவர் அடையாளங்களை செய்கிறார். ஆகையால் அந்த அடையாளத்தையும், அவர் என்ன முன்னறிவிக்கிறார் என்பதையும் கவனியுங்கள். அவர், "அது நிறைவேறினால் அப்பொழுது அவனுக்கு செவி கொடுங்கள்" என்றார். எண்ணாகமம் **12:6.** "அது நிறைவேறவில்லையென்றால் அதை மறந்துவிடுங்கள்." அது அவர் தருகின்ற ஒரு ஆவிக்குரிய பிரகாரமான அடையாளமாயிருக்க வேண்டியதாயிருக்கிறது.

*அடையாளத்தின்*

*சத்தம்* 64-0321E

# தீர்க்கதரிசி தன்னுடைய சொந்த வார்த்தைகளை பேச முடியாதபடிக்கு உண்டாக்கப்பட்டிருக்கிறான்

அவர் தீர்க்கதரிசிகளின் மூலம் உரைத்தார்... நேற்று மாலை அதை குறிப்பிட்டேன். நாம் ஏசாயாவின் புத்தகத்தை எடுத்துக்கொண்டால் அவன், “ஒரு கன்னிகை கர்ப்பவதியாவாள்” என்று தீர்க்கதரிசனம் உரைத்தான். ஜனங்களிடம், “ஒரு கன்னிகை கர்ப்பவதியாவாள்” என்று ஒரு மனிதன் கூறுவானென்று யார் நினைத்துப் பார்க்க முடியும்? ஆனால் அவன்– தீர்க்கதரிசி தேவனை பிரதிபலிப்பவனாக இருக்கிறான். அவன் தன்னுடைய சொந்த வார்த்தைகளை பேச முடியாதபடிக்கு உண்டாக்கப்பட்டிருக்கிறான். அவன் தேவனுடைய வார்த்தைகளை மாத்திரமே உரைக்கிறவனாக இருக்க வேண்டும். அவன் பிரதிபலிக்கும் கருவியைப் போன்றவன். அவன் தேவனுடைய வாயாகத் திகழ்கிறான்.

*இனி வரப்போகும் காரியங்கள் 65-1205*

## சுவிசேஷகன்

சுவிசேஷகன் (Evangelist) ஒரு விசேஷித்த மனிதன். அவர் தீப்பந்து போல் எரிந்து கொண்டிருப்பவர். அவர் ஒரு நகரத்துக்குள்ளே பிரவேசித்து அவருடைய செய்தியைப் பிரசங்கித்து விட்டு, அங்கிருந்து புறப்பட்டு மற்றொரு இடத்துக்கு செல்கிறார். பாருங்கள். அவர் ஒரு விசேஷித்த மனிதன்.

*எச்சரிக்கை அதன்பிறகு நியாயத்தீர்ப்பு 63-0724*

தேவன் தன்னுடைய வார்த்தையைச் சுற்றிச்சூழ ஒரு காவலனைப் போடவில்லை என்று நினைத்தீர்களா? இதோ இங்கே காளை, சிங்கம், மனிதன், கழுகு ஆகியவை உள்ளன. அவைகள்

இன்னமும் இங்கே பூமியில் அவ்வாசல்களில் இருந்து கொண்டிருக்கவில்லையா? அவர்கள் தான் நான்கு சுவிசேஷங்களாகும். பாருங்கள்? அவைகள் போன எத்திசையிலும் நேராகச் சென்றன. ஒன்றுக்கொன்று முரண்பட்டிருக்கவில்லை. அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்தே நின்றன. பாருங்கள்? அவைகளில் ஒன்று மனிதனுடைய விவேகத்தோடும், இன்னொன்று கழுகின் வேகமாக செயல்படுகிற தன்மையோடும் போகின்றன. இன்னொன்று ஒரு மேய்ப்பனாக இருக்கிறது. ஒன்று சுவிசேஷகனாயிருக்கிறது, ஒன்று சுவிசேஷகனைப் போல் பறந்து கொண்டேயிருக்கிறது... இன்னொன்று மேய்ப்பனாக இருக்கிறது. இன்னொன்று கட்டுறுதி வாய்ந்ததாக இருக்கிறது. இன்னொன்று கூர்மதி வாய்ந்ததாக இருக்கிறது. பாருங்கள், அவைகள் ஒவ்வொரு திசையிலும் காவல் செய்தன. தேவன் இந்த பரிசுத்த ஆவி

சுவிசேஷத்தை காவல் செய்கிறார். அதை விசுவாசியுங்கள், சகோதரரே.

*இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும் 61-0108*

எனவே, சகோதரரே, இதை எப்பொழுதும் கடைப்பிடியுங்கள். அதாவது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றும் போது அதை செய்வது வேதப்பூர்வமானதா (அது வேதத்தில் உள்ளதா) என்பதை கண்டுபிடியுங்கள். அது வேதத்தில் ஒரு இடத்தில் மாத்திரமே எழுதப்படுவதல்ல, நீங்கள் அதைச் செய்வதற்கு அது வேதம் முழுவதிலும் உள்ளதா என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்னும் அர்த்தத்தில் தான் நான் கூறுகிறேன். உங்கள் ஸ்தானம். நீங்கள் சுவிசேஷகர்; மேய்ப்பர், போதகர், தீர்க்கதரிசி, தேவன் உங்களை எந்த ஸ்தானத்தில் இருக்க அழைத்திருக்கிறாரோ அந்த ஸ்தானம்.

பாருங்கள்? அல்லது உங்களுக்கு அந்நிய பாஷைகள் பேசும் வரம், பாஷைக்கு அர்த்தம் சொல்லும் வரம், சபையில் உள்ள ஒன்பது ஆவிக்குரிய வரங்களில் ஏதாவது வரம், சபைக்குள்ள நான்கு ஆவிக்குரிய உத்தியோகங்களில் ஏதாவதொரு ஸ்தானம் இருக்குமானால் முதலாவதாக தேவன் அழைத்தாரா என்பதைப் பாருங்கள்.

அதன் பிறகு, வழக்கமாக, அதை நான் எவ்விதம் கவனிப்பேன் என்றால்... நான் என்ன செய்வேன் என்று கூறுகிறேன். நான் ஒரு நபரின் சுபாவத்தைக் கவனித்துக்கொண்டே வந்து அவர்கள் எந்தவிதமான வரத்தை உடையவர்களாக இருக்கிறார்கள் என்று காண்பேன். பாருங்கள். தேவன் தம் சிருஷ்டியுடன், அவர் அவனை எந்தவிதமாக உண்டாக்கியிருக்கிறாரோ அந்த விதத்தில் கிரியை செய்வார். பாருங்கள்? அவர் ஒரு சிருஷ்டியை உண்டாக்கினால்...

நீங்கள் ஒரு மனிதனை சலன புத்தியுள்ளவராயிருக்கக் கண்டு, அவர்,

“கர்த்தர் என்னை ஒரு மேய்ப்பனாக இருக்க அழைத்திருக்கிறார்” என்பாரானால், மேய்ப்பன் சலன புத்தியுள்ளவராக இருக்க முடியாது. மேய்ப்பன் திடமானவர். நிலையுள்ளவர். பாருங்கள்?

“தேவன் என்னை போதகராக (Teacher) அழைத்திருக்கிறார்.” அவர் வார்த்தையை எவ்விதம் வியாக்கியானம் செய்கிறார் என்பதைக் கவனியுங்கள். பாருங்கள்? அவர் எல்லாவற்றையும் குழப்புவாரானால், அப்பொழுது நீங்கள் அவர் உண்மையில் போதகர்தானா என்று சொல்லிவிடலாம். பாருங்கள்?

அப்படியானால் செய்ய வேண்டிய காரியம் என்னவெனில், நீங்கள் அதைச் செய்ய முடியுமா இல்லையா என்பதைப் பொருத்து உங்கள் ஸ்தானம் வழக்கமாக அறிந்து கொள்ளப்படுகிறது.

இப்பொழுது, தேவன் என்னை ஒரு சுவிசேஷகராக அழைத்த போது, நான் மேய்பனாக இருக்க விரும்பினேன். வீட்டிலேயே தங்கியிருப்பது நன்றாயிருக்கும் என்று எண்ணினேன்.

தேவன் என்னை அழைத்தார். முடிவில் எல்லா மக்களும் ஒன்று கூடி அவர்கள் மிகவும் அழுது 1717 ஸ்பிரிங் தெருவிலிருந்து வெளிவந்தனர். அவர்களில் ஒருவரும் இன்றிரவு இங்கில்லை. அருகில் வசித்த திருமதி ஹாக்கின்ஸ் என்னைச் சந்தித்து (அது பொருளாதார நெருக்கடி உண்டாயிருந்த காலம். அண்டை வீட்டிலுள்ள ஒருவர் ஒரு பானை பீன்ஸ் சமைத்து, நாங்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து அதை உண்பது வழக்கம்) அழுது கொண்டே என்னிடம், “நீர் மாத்திரம் ஒரு கூடாரத்தை கட்டுவீரானால், மேசையில் என் பிள்ளைகளின் ஆகாரத்தை குறைத்துக் கொண்டு, அதற்கு பணம் தருவேன்” என்றாள். பாருங்கள்?

என் அழைப்பு சுவிசேஷகராக இருக்க... அன்று காலையில்... இங்குள்ள இந்த மூலைக் கல்லை இன்றிரவு நீங்கள் தகர்த்தால், என் வேதாகமத்தின் கடைசி பகுதியில் வைக்கப்பட்டுள்ள ஒரு காகிதம் அதில் காணப்படும், நான் சுவிசேஷகனாக இருக்க வேண்டுமென்று

அவர் என்னிடம் கூறினது அதில் எழுதப்பட்டுள்ளது. பாருங்கள்? நான் வெற்றிகரமான மேய்ப்பனாக இருக்கவேயில்லை. அவ்விதம் இருக்கவும் போவதில்லை. ஏனெனில் ஒரு மேய்ப்பனுக்கு இருக்க வேண்டிய பொறுமை எனக்கில்லை. பாருங்கள்? எனவே நான் மேய்ப்பனாக இருக்க முயன்றால், ஒரு மேய்ப்பன் சுவிசேஷகனாக இருக்க முயன்றால் அது எப்படி முடியாத காரியமோ, அது போல் இருக்கும்.

நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? கர்த்தர் உங்களை எந்தவிதமாக அழைத்திருக்கிறாரோ, சரீரத்தில் உங்கள் ஸ்தானம் எதுவோ, அதை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

*கேள்விகளும் பதில்களும்* 61-0112

ஆகவே இப்போது இந்த காலை வேளையில் நீங்கள் ஜெபிக்க வரும்போது, வேதாகமத்தில் கூறியுள்ளதை நினைவு கூறுங்கள். அது உண்மை. யாக்கோபு **5:14** “உங்களில்

ஒருவன் வியாதிப்பட்டால் அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக, அவர்கள் (கர்த்தருடைய நாமத்தினாலே) அவனுக்கு எண்ணை பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். கர்த்தர் அவனை எழுப்புவார்" என்பதை நினைவு கூருங்கள். நீங்கள் விசுவாசித்தால் அது ஒரு வாக்குத்தத்தமே. எனவே பாருங்கள். சுகமளித்தல் தனிப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது.

நசரேயனாகிய இயேசுவின் நாட்களில் அவர், அவர்களின் சொந்த விசுவாசத்திற்கு மாறாக மக்களை அவரால் குணப்படுத்த கூடாமல் இருந்தது. "நீ விசுவாசித்தால் என்னால் கூடும். என்னால் இதை செய்யக்கூடும் என்று நீ விசுவாசித்தால், என்னால் இதை செய்யக்கூடும்" என்று கூறினார். உங்களால் விசுவாசிக்க கூடுமானால்!

ஆகவே, சிலர் சுகமளிக்கும் வல்லமை மற்றவர்களுக்கோ, சுவிசேஷகர்களுக்கோ உரியது என்று எண்ணுகிறார்கள். அது

அப்படியல்ல. சுகமளிக்கும் வல்லமை உங்களுக்குள் இருக்கிறது. அது உங்களுக்குள் இருக்கிறது. அவர்கள் வண்டியை அப்படியே குதிரையின் முன் வைக்கின்றனர். சுகமளிக்கும் வல்லமை சுவிசேஷகர்களிடத்தில் இல்லை.

*விசுவாசம்* 61-0813

## சுவிசேஷகர்கள் வயலில் தொடர்ந்து ஊழியம் செய்ய வேண்டுமா?

"இந்த வேளையில்" என்று சொல்ல கருதுகிறேன். நிச்சயமாக எந்த விதத்திலும் அவர்கள் தொடர்ந்து ஊழியம் செய்ய வேண்டும். ஒரு காரியத்தையும் மாற்றவேண்டாம். இக்காலையில் இயேசு வருவதாக இருந்தாலும், இன்றையிலிருந்து பத்து வருடங்களுக்குப் பிறகு அது இருப்பது போல பிரசங்கம் பண்ணு. ஆனால் இந்த மணிவேளையில் இருப்பது போல ஜீவி.

இப்பொழுது குழப்பமாக்கிக்கொள்ள வேண்டாம். அதைக் குறித்துதான் உங்களை எச்சரிக்க முயற்சிக்கிறேன். விசித்தரமாக இருக்க வேண்டாம். எதையும் மாற்ற வேண்டாம். ஆனால் நீங்கள் எதாகிலும் தவறோ அல்லது தீமையோ செய்துக் கெண்டிருப்பீர்களால் மனந்திரும்புங்கள். தேவனிடம் திரும்புங்கள். நீங்கள் எப்பொழுதும் செய்தது போல சுவிசேஷ ஊழியத்தை தொடர்ந்து செய்யுங்கள்.

*முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்* 63-0324 M

## மேய்ப்பர்

### நீங்கள் உங்களுடைய மேய்ப்பனைவிட (பாஸ்டரைவிட) மேலாக இருந்து விடமுடியாது

“மறைவான மன்னா” என்பது சிறப்பானதொன்றாகும். அதில் என்ன

அப்படிச் சிறப்பு உள்ளது. பரிசுத்த ஆவியின் ஆசீர்வாதங்களா அவை? இல்லை, அது முழு சபைக்கும் உரியதாகும். ஆனால் "மறைவான மன்னா" என்றால், அது தானே ஒரு விசேஷமான வெளிப்படுத்தலாயிருக்கிறது. ஏனெனில் மற்றவர்களுக்கு அவன் போதிக்க வேண்டியவனாய் இருக்கிறபடியால், அது அவனுக்கு கொடுக்கப்படுகிறது. பாருங்கள்? மறைவான மன்னா என்பது, மற்றவர்களுக்கு போதிக்கும்படி, சபையின் தூதனுக்கு, வேதத்தின் பேரில் ஏனையோரைக் காட்டிலும் சற்று கூடுதலான அறிவை தேவன் கொடுத்தலாகும். அவன் அவ்வாறுதான் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அது சரியா? நீங்கள் உங்களுடைய மேய்ப்பனைவிட (பாஸ்டரைவிட) மேலாக இருந்து விடமுடியாது. அதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களைப் போஷிப்பதற்காக தேவன் ஏற்படுத்தியுள்ள மேய்ப்பன் அவன். அவன் மேய்ப்பனாக

(பாஸ்டர் ஆக) இருப்பானெனில், ஆடுகளை போஷிப்பதற்காக உள்ள மறைவான மன்னா எங்கிருக்கிறது என்பதை அவன் அறிந்திருக்க வேண்டும். அது அப்படிதானே? சற்று சிறப்பானது அது. இதை ஒரு நிமிடம் கவனித்துப் பாருங்கள். வெளிப்படுத்துதலாகிய மறைவான மன்னா.

*பெர்கமு*

*சபையின் காலம்* 60-1207

சிறிய சபையே, நீங்கள் தேவனுடைய கிருபையில், உறுதியாக நிலைத்திருக்கவும், எப்பொழுதும் கல்வாரியை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கவும், உங்கள் ஆத்துமா, இருதயத்தினின்று எல்லா கசப்பான வேரையும் அகற்றிவிட்டு, தேவன் எந்த சமயத்திலும் உங்களை உபயோகிக்கத் தக்கதாகவும் இருக்கும்படி நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால்

எச்சரித்து அறிவுறுத்துகிறேன். எதையாவது நீங்கள் செய்யும்படியோ, அல்லது ஏதாவது ஒரு வெளிப்பாடோ வினோதமான முறையில் உங்களுக்கு எச்சரிக்கையாக வருமென்றால், கவனமாக இருங்கள். மிகவும் சூழ்ச்சியும் சாமர்த்தியமும் உள்ளவனாக சாத்தான் இருக்கிறான். பாருங்கள்? அதை தேவனுடைய வார்த்தையோடு சரிபார்த்து உங்களது மேய்ப்பனோடு அதைப்பற்றி கலந்தாலோசியுங்கள்.

*இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும்*

## நீங்கள் உங்கள் போதகரை நேசிக்க வேண்டும்

உங்களால் மனிதனுக்கு மரியாதை செலுத்த முடியாவிட்டால், அவர் தேவனில் கொண்டுள்ள அவருடைய உத்தியோகத்துக்காவது அவருக்கு மரியாதை கொடுங்கள். அது முற்றிலும்

உண்மை! அவருக்கு மரியாதை கொடுங்கள். போதகர் வந்தால், அவரை மதியுங்கள். சபையோர் போதகரை குறை கூறி, ஏளனம் செய்து பேசுவதை நான் கண்டிருக்கிறேன். அந்த போதகர் உங்களுக்கு என்ன செய்யமுடியும்? ஒன்றுமே செய்ய முடியாது. இந்த சபையை நான் கூறவில்லை, நான் கண்ட மற்ற சபைகளைக் கூறுகிறேன்... நீங்கள் உங்கள் போதகரை நேசிக்க வேண்டும். அவரும் ஒரு மனிதரே, ஆனால் தேவன் அவரைப் போதகராக்கியிருக்கிறார் என்பதை நீங்கள் உணர வேண்டும். பரிசுத்த ஆவியானவர் அவரைக் கண்காணிக்க நியமித்திருக்கிறார். அப்படியானால் அதற்கேற்ற மரியாதை நீங்கள் அவருக்கு கொடுக்க வேண்டும். போதகர் என்ன செய்த போதிலும், அவர் தேவனுடைய ஊழியக்காரர் என்னும் முறையில், உங்கள் இருதயத்தில் அவருக்கு மதிப்பு கொடுத்தால், அதற்காக தேவன் உங்களை மதிப்பார்.

"என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான்" என்று இயேசு கூறினார். (யோவான் 13:20). "என்னை ஏற்றுக் கொள்ளாதவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளமாட்டான்." பாருங்கள், தேவன் அவர்களுடைய பிதாவென்று அவர்கள் கூறிக் கொண்டனர். அவரோ, "உங்கள் பிதா பிசாசு" என்றார் (யோவான் 8:44)

*மரியாதை* 61-1015E

## அவர் சுமைகளை சுமக்க கூடியவர்

ஆனால் பாருங்கள், சபைக்கு ஒரு மேய்ப்பன் (Pastor) இருக்கிறார். அந்த மேய்ப்பன் ஒரு விசேஷித்த நபர். அவர் தங்களுடைய வீண் சந்தடிகளை சமாளிப்பதற்கான அமைப்பு கொண்டவராயிருக்கிறார். அவர்

சுமைகளை சுமக்க கூடியவர். அவர் குழுவின் காளை. அவர் அமர்ந்து கொண்டு... யாராகிலும் ஒருவருக்கு வெறொருவருக்கு எதிராக ஏதாகிலும் இருக்குமானால், அந்த இரு குடும்பங்களுடன் உட்கார்ந்து (யாருடைய பக்கமும் சாராமல்) நியாயத்தை எடுத்துக் கூறி, அவர்களை மீண்டும் இனிமைக்கு கொண்டு வரக்கூடியவர். பாருங்கள்? அவர் மேய்ப்பன். அவருக்கு காரியங்களை எப்படி கவனித்துக் கொள்வதென்று தெரியும்.

*எச்சரிக்கை அதன்பிறகு*

*நியாயத்தீர்ப்பு* 63-0724

## போதகர் உண்மையில் ஒரு ஆசாரியர்; அவர் மக்களுக்காக பரிந்து பேசுபவர்

அவர்கள் ஒரு போதகரின் வார்த்தைகளை, அது மரணத்துக்கும் ஜீவனுக்குமிடையேயுள்ள ஒன்றாக

எண்ணி, இறுகப் பற்றி கொள்கின்றனர். அவர்கள் தங்கள் ஸ்தாபனத்தை சேர்ந்த குருவானவரின் சொற்களை அது மரணத்துக்கும் ஜீவனுக்குமிடையேயுள்ள ஒன்றாக எண்ணி, இறுகப் பற்றிக் கொள்கின்றனர். அந்த குருவானவரும், தான் வேத பள்ளியில் எவ்வாறு கற்பிக்கப்பட்டாரே, அதே விதமாக தனக்குத் தெரிந்த வரையில் தன் ஜனங்களுக்குப் போதிக்கிறார். வெவ்வேறு மார்க்கங்கள் தங்கள் குருவானவர்களைக் கொண்டுள்ளன... போதகர் உண்மையில் ஒரு ஆசாரியர்; அவர் மக்களுக்காக பரிந்து பேசுபவர். எனவே அப்படிப்பட்ட ஒருவர், வேதப்பள்ளியிலும் குருக்களின் மடத்திலும் கற்ற அனைத்தையும் ஆழ்ந்த உத்தமத்துடன் அவர் கற்ற விதமாகவே கற்பிக்கிறார்...

*விவாகமும்*

*விவாகரத்தும்* 65-0221M

## மேய்ப்பன் திடமானவர்

நீங்கள் ஒரு மனிதனை சலன புத்தியுள்ளவராயிருக்கக் கண்டு, அவர், "கர்த்தர் என்னை ஒரு மேய்ப்பனாக இருக்க அழைத்திருக்கிறார்" என்பாரானால், மேய்ப்பன் சலன புத்தியுள்ளவராக இருக்க முடியாது. மேய்ப்பன் திடமானவர், நிலையுள்ளவர். பாருங்கள்?

"தேவன் என்னை போதகராக (Teacher) அழைத்திருக்கிறார்" அவர் வார்த்தையை எவ்விதம் வியாக்கியானம் செய்கிறார் என்பதைக் கவனியுங்கள். பாருங்கள்? அவர் எல்லாவற்றையும் குழப்புவாரானால், அப்பொழுது நீங்கள் அவர் உண்மையில் போதகர் தானா என்று சொல்லிவிடலாம். பாருங்கள்?

அப்படியானால், செய்ய வேண்டிய காரியம் என்னவெனில், நீங்கள் அதைச் செய்ய முடியுமா இல்லையா என்பதைப் பொருத்து உங்கள் ஸ்தானம் வழக்கமாக அறிந்து கொள்ளப்படுகிறது.

*கேள்விகளும் பதில்களும் 61-0112*

## போதகர்

போதகர் (Teacher) ஒரு விசேஷித்த மனிதன். அவர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் கீழ் உட்கார்ந்து கொண்டு பரிசுத்த ஆவியின் உதவியினால் தேவனுடைய வார்த்தைகளை ஒன்று சேர்க்கிறார். மேய்ப்பன் அல்லது சுவிசேஷகன், இவர்களில் ஒருவரும் கூட அவருடன் ஒப்பிடப்பட முடியாது.

*எச்சரிக்கை அதன்பிறகு நியாயத்தீர்ப்பு 63-0724*

எபேசியர்கள் எவ்வாறு உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவனுடைய சுவீகார புத்திரராகும்படிக்கு முன்குறிக்கப் பட்டிருந்தனர் என்பதை பவுலால்

அவர்களுக்கு அங்கே போதிக்க முடிந்தது என்பதை நாம் கவனிக்கிறோம். இப்பொழுது அவனால்... கொரிந்தியர்களோ அதைக் குறித்து ஒன்றுமே அறிந்திருக்கவில்லை. அவர்கள் வெறுமனே... அவர்கள் சிறு உள்ளுணர்வை அல்லது அதைப்போன்ற ஏதோ ஒன்றை, சிறு உணர்ச்சிவசப்படுதலை உடையவர்களா யிருந்தனர். அவர்கள் அதின்பேரிலே சார்ந்திருந்தனர். எனவே அவனால் ஆழமான காரியங்களை அவர்களுக்குப் போதிக்க முடியவில்லை.

*கொரிந்தியர், திருத்துதலைக் கொண்ட புஸ்தகம்*
57-0414

“தேவன் என்னை போதகராக (Teacher) அழைத்திருக்கிறார்.” அவர் வார்த்தையை எவ்விதம் வியாக்கியானம் செய்கிறார் என்பதைக் கவனியுங்கள். பாருங்கள்? அவர் எல்லாவற்றையும் குழப்புவரானால் அப்பொழுது நீங்கள்

**அவர் உண்மையில் போதகர்தானா என்று சொல்லிவிடலாம். பாருங்கள்?**

*கேள்விகளும் பதில்களும்* 61-0112

★★★★★

Only believe,
Only believe
All things are possible,
Only believe.

சகோ. பினேகாஸ்
போன்: 8838623242, 9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in